# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**14.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. 14.10.22
   - இன்று **உலக தர நிர்ணய தினம்** (World standard day) (1970 முதல்).
   - **உலக முட்டை தினம்** (1996 முதல்).
   - இந்திய குடிமைப் பணி (ICS) தேர்வில் வெற்றி பெற்ற முதல் பெண் **C.P.முத்தம்மா** (2009) நினைவு தினம்.

## மத்திய செய்திகள்

1. **ஹிஜாப் தடை செல்லும்- செல்லாது**
   - கர்நாடகத்தில் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிந்து கல்வி நிறுவனங்களுக்கு வருவதற்கு தடை விதித்து மாநில அரசு பிறப்பித்த உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கில் உச்ச நீதிமன்ற அமர்வின் இரு நீதிபதிகளும் மாறுபட்ட தீர்ப்பு வழங்கினார்.
   - **நீதிபதி ஹேமந்த் குப்தா** வெளியிட்டுள்ள **140 பக்கங்களைக்** கொண்ட தீர்ப்பில் அனைவருக்கும் சமமான சூழலை ஏற்படுத்துவதற்காக கர்நாடகா அரசு தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.
   - மதச்சார்பின்மை பள்ளியில் மாணவிகள் **ஹிஜாப் அணிவதை உரிமையாக கோருவது தவறு.**
   - **நீதிபதி சுதான்ஷு துனியா** வழங்கிய தீர்ப்பில் **77 பக்கங்கள்** கொண்ட தீர்ப்பில் ஹிஜாப் அணிவது கட்டாய மத சம்பிரதாயம் அல்ல என்பதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கர்நாடக உயர் நீதிமன்றம் இந்த மனுவை தள்ளுபடி செய்திருக்கக் கூடாது.
   - ஹிஜாப் அணிவது விருப்பத்தின் அடிப்படையில் நேர்மையானதாக இருந்தாலும் அது **மனசாட்சி, நம்பிக்கை உணர்வின் வெளிப்பாடயாக** தொடர்கிறது.
   - **ஹிஜாபுக்கு தடை விதிப்பது என்பது பெண் கல்விக்கு தடை விதிப்பதை போல ஆகும்.**

2. **சர்வதேச நாடாளுமன்ற யூனியன் செயற்குழு உறுப்பினராக பாஜக எம்.பி தேர்வு**
   - ருவாண்டவில் நடைபெற்று வரும் இந்த யூனியன் கூட்டத்தில் தேர்தல் நடைபெற்றதாக மாநிலங்களவை அலுவலகம் தெரிவித்தது.
   - சுமார் 128 நாடுகளை உறுப்பினர்களாக கொண்டு கடந்த **133 ஆண்டுகளாக** செயல்பட்டு வரும் சர்வதேச நாடாளுமன்றங்களுக்கு இடையேயான யூனியனின் ( ஐபியு) **145 ஆவது பேரவை கூட்டம் ருவாண்டா தலைநகர் கிகாலியில்** நடைபெற்று வருகிறது.
   - இதில் இந்திய நாடாளுமன்றம் சார்பில் மாநிலங்களவை துணைத் தலைவர் **ஹரிவன்ஸ் நாராயணன் சிங்** தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

பங்கேற்றுள்ளனர்.

- இந்த கூட்டத்திற்கு இடையே ஐபியு இன் செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் **கிகாலி கூட்டத்தில்** நடைபெற்றது.
- இதில் பல்வேறு குழு நாடுகளின் உறுப்பினர் தேர்வு செய்யப்படுவதில் ஆசிய பசுபிக் குழும நாடுகளில் இருந்து **ஐபியு செயற்குழுவிற்கு** ஒரு உறுப்பினரே தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ரகசிய வாக்கெடுப்பு முறையில் நடைபெற்றது.
- எதிர் போட்டியிட்ட இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையில் பாஜக உறுப்பினரான அபராஜிதா சாரங்கி பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று செயற்குழுவிற்கு தேர்வாகி இருப்பதாக மாநிலங்களவை அலுவலகம் வெளியிட்டுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஐபியு செயற்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள **அபராஜிதா சாரங்கி புவனேஸ்வரன்** மக்களவைத் தொகுதி உறுப்பினர் ஆவார்.
- முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியான இவர் மத்திய, மாநில அரசுகளில் பணியாற்றியவர்.
- விருப்ப ஓய்வில் சென்று கடந்த **2019 ஆம் ஆண்டு** பாஜகவில் இணைந்தார். அதே ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

### 3. வந்தே பாரத்

- உனா டெல்லி இடையேயான வந்தே பாரத் ரயில் சேவையையும் பிரதமர் மோடி துவக்கி வைத்தார்
- அடுத்த ஆண்டு ஆகஸ்ட் ஆண்டுக்குள் **75 வந்தே பாரத் ரயில்களை** இயக்குவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ள நிலையில் , இது நான்காவது வந்தே பாரத் ரயில் சேவை ஆகும்.
- உனாவில் இந்திய தகவல் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.
- மருந்துகளுக்கான மூலப் பொருள்களை தயாரிப்பதற்கான பூங்காவை **ஹரோலியில் ரூபாய் 1900 கோடியில்** கட்டுவதற்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.
- இரு நீர்மின் உற்பத்தி திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.
- **பழங்குடியினர் மீது அக்கறை**:
  - மாநிலத்தில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.
  - மாநிலத்தில் உள்ள **'ஹட்டி'** சமூகத்துக்கு பழங்குடியின அந்தஸ்தை பாஜக அரசு வழங்கியுள்ளது.
  - **விரைவில் வந்தே பாரத் சரக்கு ரயில்**:
    - ✓ சரக்கு பொருட்களை விரைவாக கொண்டு செல்லும் வகையில் வந்தே பாரத் சரக்கு ரயிலின் முதலாவது சேவையை **தில்லி என்சிஆர்** மற்றும் **மும்பை** பிராந்தியங்களில் அறிமுகப்படுத்த உள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.